செ.வெ.எண்:41 நாள்: 15.08.2021

**நாமக்கல் மாவட்ட விளையாட்டு மைதானத்தில், இந்தியத் திருநாட்டின் 75-வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டார்.**

-----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில், கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாடுகளுடன் இன்று (15.08.2021) நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். சுதந்திர தின விழாவை கொண்டாடும் விதமாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள், காவல் கண்காணிப்பாளர் திரு.சரோஜ் குமார் டாகுர்.இ.கா.ப., அவர்களுடன் இணைந்து வெண்புறாக்களையும், வண்ணப்பலூன்களையும் வானில் பறக்க விட்டார்.

பின்னர், அணிவகுப்பினை சிறப்பாக நடத்தியதற்காக ஆயுதப்படை காவலர்கள் மற்றும் ஊர்க்காவல் படையினருக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை அலுவலர்களுக்கும், காவல்துறை பேண்ட் வாத்தியக்குழுவினருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் பாராட்டு தெரிவித்து, கேடயங்களை வழங்கினார்.

சிறப்பாக பணியாற்றிய 28 காவல்துறை அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்களையும், பல்வேறு அரசுத்துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 173 அரசு துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், கொரோனா நோய்த்தொற்று தடுப்பு பணியில் நேரடியாக ஈடுபட்டு நோய்த்தொற்றை கட்டுப்படுத்தும் பணியில் இடைவிடாது பணியாற்றி வரும் 212 முன்களப் பணியாளர்களுக்கும் அவர்களது பணியினை பாராட்டி நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், சுதந்திர போராட்ட தியாகிகளை சிறப்பிக்கும் விதமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எர்ணாபுரம், குட்டித்தெருவில் திருமதி.அருக்காணிஅம்மாள் கருப்பையா அவர்களின் இல்லத்திற்கு சென்று பொன்னாடை அணிவித்து அவர்களை சிறப்பித்தார்.

அதனைத்தொடர்ந்து, நாமக்கல் வட்டத்தில் 9 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும், இராசிபுரம் வட்டத்தில் 3 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும், சேந்தமங்கலம் வட்டத்தில் 9 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும், மோகனூர் வட்டத்தில் 11 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும், திருச்செங்கோடு வட்டத்தில் 9 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும், குமாரபாளையம் வட்டத்தில் 4 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும், பரமத்தி வேலூர் வட்டத்தில் 9 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கும் வருவாய்த்துறையினர் மூலம் சுதந்திர போராட்ட தியாகிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

தொடர்ந்து, நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோவிலில் நடைபெற்ற சமபந்தியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு உணவு பொட்டலங்களை வழங்கினார்.

இவ்விழாவில் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எ.கே.பி.சின்ராஜ், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி.ஆர்.சாரதா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சு.வடிவேல், நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.எஸ்.சோமசுந்தரம், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தே.இளவரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரமேஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.இளங்கோ, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.ஆர்.சரண், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) சீ.கோகுல், வட்டாட்சியர்கள், உட்பட அரசுத்துறை அலுவலர்கள், காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.